This factsheet has been translated into the local language thanks to the valued support of local NGOs

# உலகளாவிய சித்திரவதை குறியீடு 2025:

இந்தியா தகவல் தாள்

## ஒட்டுமொத்த உலகளாவிய சித்திரவதை குறியீட்டு எண்:

அதிக ஆபத்து

உலக சித்திரவதை குறியீடு 2025 என்பது, உலகளாவிய அளவில் 26 நாடுகளில் சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் குடிமக்கள் மீது நடத்தப்படும் உரிமை மீறல்களை மதிப்பீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஓர் ஆய்வாகும். இந்தியாவைப் பற்றிய இத்தகவல் அறிக்கை (2025), நாட்டின் ஒட்டுமொத்த செயல்திறன் சார்ந்த பகுப்பாய்வையும், தனிப்பட்ட கருப்பொருளை மையப்படுத்தி திரட்டப்பட்ட தகவல்களின் வகைப்பாடுகளையும், சித்திரவதை ஒழிப்பிலும் மனித உரிமைகள் மேம்பாட்டிலும், பயனுள்ள மாற்றங்களை முன்னெடுக்க வேண்டிய முக்கிய பரிந்துரைகளையும் உள்ளடக்கியதாகும்.

## இந்தியாவில் இந்த ஆய்வில் பங்கேற்ற அமைப்பு:

மக்கள் கண்காணிப்பகம்

## சுருக்கமான பார்வை

காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் சட்ட அமலாக்க நடவடிக்கைகள் அல்லது விசாரணைகளின் போது இந்தியாவில் திட்டமிட்டும், தொடர்ந்தும், பரவலாகவும் சித்திரவதை நிகழ்த்தப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான உலக சித்திரவதை குறியீட்டின் படி, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தைகளில் அதிக ஆபத்தான நாடாக இந்தியா வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடுமையான **தாக்குதல், துன்புறுத்தல்**, அடித்தல், கட்டாய**ப்படுத்தி** ஒப்புதல் வாக்குமூலம் **பெறுதல்**, காவல் நிலையங்களில் உயிரிழப்பு போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன; குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் — தலித், ஆதிவாசி, முஸ்லிம், **மாற்றுப் பாலினத்தவர் (LGBTQIA+)** மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் - அதிகமாக குறிவைக்கப்படுகின்றனர். மேற்கு வங்காளத்தில், குறிப்பாக இந்தியா–வங்கதேச எல்லைப்பகுதியில் வாழும் மக்கள், எல்லையோர பாதுகாப்பு படையினரால் இடையறாத வன்முறை, சித்திரவதை மற்றும் சட்டப்புறம்பான கொலைகளை எதிர்கொள்கின்றனர். எல்லையோர பாதுகாப்புப் படையினருக்கு (BSF) வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான தண்டனைவிலக்கு (Legal impunity), பாதிக்கப்பட்டோருக்கு நீதியை பெற்றுத் தருவதிலும், அரசு இயந்திரங்கள் மீதான கடப்பாட்டையும் பொறுப்புணர்வையும் உறுதிப்படுத்துவதிலும் பெரும் தடையாக உள்ளது.

சாதாரணமாக நிகழும் நடைமுறைகளில், திக்குத்தெரியாத இடங்களில் சட்டவிரோதக் காவல் வைப்பும், சட்டப்புறம்பான கொலைகளும் (extrajudicial Killing) அடங்கும்; பல நேரங்களில் இத்தகைய மீறல்களை நிகழ்த்தும் காவல்துறை அதிகாரிகள் பதவி உயர்வுகளால் பாராட்டப்படுகின்றனர். மனித உரிமை பாதுகாவலர்கள் அடிக்கடி நியாயமற்ற கைது, தடுப்பு காவல், சித்திரவதை மற்றும்

மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இது, நிறுவனமயமாக்கப்பட்ட வன்முறையையும், தண்டனை விலக்கையும் வெளிச்சமிட்டு காட்டுகிறது.

இந்தியாவின் அரசியல் மற்றும் நிறுவன கட்டமைப்பு இதுபோன்ற இக்கட்டான நிலையை இன்னும் கூர்மைப்படுத்துகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் சித்திரவதை கூடாது என்று கூறினாலும் சித்திரவதையை தடுப்பதற்கு தனித்த தேசிய அளவிலான சட்டம் ஏதுமில்லை. ஐ.நா. சித்திரவதைக்கு எதிரான **உடன்படிக்கை (UN Convention Against Torture -UNCAT)** மற்றும் அதனை ஒட்டிய நெறிமுறைகள் போன்ற முக்கிய **பன்னாட்டுச் சட்டங்களை இந்தியா இதுவரை ஏற்புறுதி செய்யவில்லை.** 2019ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தில் (UAPA) சமூக செயற்பாட்டாளர்களை 'தீவிரவாதிகளாக' முத்திரை குத்த வழிவகை செய்கிறது. இவ்வாறு மாற்றுக் கருத்து கொண்டோரை ஒடுக்குகின்ற நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. பன்னாட்டு கண்காணிப்பை மேற்கொள்ளும் அமைப்புகளுக்கு இந்தியா பெயரளவிலேயே அழைப்பு விடுக்கிறது. சித்திரவதை தொடர்பான ஐ.நா. சிறப்பு தொடர்பாளர் (UN Special Rapporteur on Torture) போன்ற பன்னாட்டு கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் நபர்கள் / அமைப்புகள் இங்கு வருவதை இந்திய அரசு தடுக்கிறது. இது, சித்திரவதை பிரச்சினைக்கு முழுமையான சட்ட ரீதியான தீர்வு இல்லாததையும், அதனை எதிர்கொள்ள போதிய அரசியல் உறுதிப்பாடு இல்லாததையும் வெளிப்படுத்துகிறது.

2024ஆம் ஆண்டு, தேசிய மனித உரிமைகள் ஆணையம் 2,739 காவல மரணங்களைப் பதிவு செய்தது; இதற்கு முன் 2023ஆம் ஆண்டு சுமார் 2,400 வழக்குகள் பதிவாகியிருந்தன. மேலும், 2022ஆம் ஆண்டு நீதித்துறை காவலில் 1,995 கைதிகள் சிறையில் உயிரிழந்தனர்; அதில் 159 மரணங்கள் இயற்கை மரணம் அல்லாதவை என பதிவாகியுள்ளது. 2018 முதல் குறைந்தது 61 மனித உரிமைக் காப்பாளர்கள் UAPA சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கடுமையான உடல் ஊனத்துடன் இருந்தபோதிலும் நீண்ட காவலில் வைக்கப்பட்டு, பின்னர் உயிரிழந்த செயற்பாட்டாளர், பேராசிரியர் ஜி. என். சாய்பாபா (G.N. Saibaba), சாதிய வன்முறையை விசாரித்ததற்காக இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட ஊடகவியலாளர் சித்திக் காப்பன் (Siddique Kappan) போன்றோரின் முக்கியமான வழக்குகளும் அடங்கும்.

சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவோரின் உரிமைகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; ஏனெனில், சித்திரவதைக்குள்ளானவர்களின் உரிமைகள், பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு போன்றவற்றை உள்ளடக்கிய முழுமையான சட்டம் இதுவரை இயற்றப்படவில்லை. புகார் அளிக்கும் முறைகள் பயனற்றதாகவும், பலமுறை புகார் அளித்தவர்களே அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றனர். தேசிய மனித உரிமைகள் ஆணையம் இயங்கிக் கொண்டிருந்தாலும், போதிய தனித்து சுதந்திரமாக இயங்கும் திறனின்றி, பாதிக்கப்பட்டோரின் தேவைகளுக்கு உரிய பதில் அளிக்கத் தவறுவது போன்ற கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறது.

## கருப்பொருள் குறித்த பார்வை (Thematic Pillar Overview):

## அரசியல் உறுதிப்பாடு (Political Commitment)

**குறியீட்டு எண் (Index Score): குறிப்பிடத்தக்க ஆபத்து (Considerable Risk)**

சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதத்தன்மையற்ற, கேவலமான, இழிவான தண்டனைகள் அல்லது நடத்தைகளை தடுப்பதில் இந்தியாவுக்கு போதிய அரசியல் நிலைப்பாடு கிடையாது. அரசமைப்புச் சட்டத்தில் சித்திரவதைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும், சித்திரவதையை தடுப்பதற்கு தனித்த தேசியச் சட்டம் இயற்றப்படவில்லை. ஐ.நா. சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை (UN Convention Against Torture -UNCAT) மற்றும் அதனை ஒட்டிய நெறிமுறைகள் போன்ற முக்கிய பன்னாட்டுச் சட்டங்களை இந்தியா இதுவரை ஏற்புறுதி செய்யவில்லை. மேலும், அதற்கான விருப்ப நெறிமுறை (OPCAT), மரண தண்டனையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட *ICCPR இரண்டாவது விருப்ப நெறிமுறை* (Second Optional Protocol to the ICCPR), வலுக்கட்டாயமாக காணாமல் போவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு உடன்படிக்கை (International Convention for the Protection of All Persons from Enforced Disappearance) போன்ற முக்கியமான பன்னாட்டு உடன்படிக்கைகள் / ஒப்பந்தங்களை இந்தியா இதுவரை ஏற்புறுதி செய்யவில்லை. பலமுறை ஐ.நா. மனித உரிமை அமைப்புகளும், அரங்கங்களும் இவற்றை ஏற்புறுதி செய்ய இந்தியாவிற்கு பரிந்துரைகளை முன்வைத்த போதிலும் இந்தியா ஏற்புறுதி செய்ய முன்வரவில்லை.

2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தில் (UAPA) திருத்தங்களை இந்தியா கொண்டு வந்தது. இதன்மூலம் மேலும் பல மோசமான பிரிவுகளை சேர்த்து, செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாப்பாளர்கள் உள்ளிட்ட தனிநபர்களை 'தீவிரவாதிகள்' என அதிகாரிகள் அறிவிக்க அனுமதித்தது. **2018 முதல் குறைந்தது 61 மனித உரிமை காப்பாளர்கள் (HRDs) UAPA அல்லது தீவிரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.**

அண்மையில் இந்தியக் குற்றவியல் சட்டங்களை மிக கடுமையாக்க மூன்று புதிய சட்டங்களை இந்தியா கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் குற்றவியல் சட்ட அமைப்பில் மிகப் பெரிய மாற்றத்தை மேற்கொண்டது. அதன்படி மூன்று புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- **பாரதிய நியாய சன்ஹிதா, 2023 (BNS) –** இது *இந்திய தண்டனைச் சட்டத்திற்கு* (IPC) மாற்றாக கொண்டு வரப்பட்டது. (சான்றாக: ஒப்புதல் வாக்குமூலத்தை கட்டாயப்படுத்தும் 120வது பிரிவு).
- **பாரதிய நாகரிக் சுரக்க்ஷா சன்ஹிதா, 2023 (BNSS) –** இது இந்திய *குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்திற்கு* (CrPC) மாற்றாக கொண்டு வரப்பட்டது.
- **பாரதிய சாட்சிய அதிநியம், 2023 (BSA) –** இது *இந்திய சாட்சிய சட்டத்திற்கு* (Evidence Act) மாற்றாக கொண்டு வரப்பட்டது.

இந்தியா, பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பு அமைப்புகளுடன் குறைந்த அளவிலேயே தன்னை ஈடுபடுத்தியுள்ளது. சித்திரவதை தொடர்பான ஐ.நா. சிறப்பு தொடர்பாளர் (UN Special Rapporteur on Torture) இந்தியா வருவதற்கு அரசு முறையாக அழைப்பு விடுத்திருந்தாலும், இத்தகைய நேரடி சந்திப்புகள் நடைபெறாமல் தடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், சிறப்பு தொடர்பாளர்களிடமிருந்து வந்த தகவல்களில் 50%-க்கும் குறைவானவற்றிற்கு மட்டுமே இந்தியா

பதிலளித்துள்ளது; அதிலும் மிகக் குறைந்த, மற்றும் சாரமற்ற, உப்பு சப்பில்லாத தகவல்களையே வழங்கியுள்ளது.

## II. காவல் துறை கொடுமை மற்றும் நிறுவனமயமான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருதல்

**குறியீட்டு எண் (Index Score): குறிப்பிடத்தக்க ஆபத்து (Considerable Risk)**

இந்தியாவில் காவல் துறையின் அத்துமீறலும் நிறுவனமயமான வன்முறையும் பரவலாகவும் ஆழமாகவும் இருக்கின்றன. சட்ட அமலாக்க அதிகாரிகளால் நிகழ்த்தப்படும் சித்திரவதைகள், மோசமான, கீழ்த்தரமான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளும் சட்டப் புறம்பான கொலைகளும் (extrajudicial) அடிக்கடி நடைபெறுவது இதற்கு சான்று. 2020 ஆம் ஆண்டு டிசம்பரில் பரம்வீர்சிங் எதிர் பல்ஜித் சிங் வழக்கில், அனைத்து காவல் நிலையங்களிலும், மத்திய புலனாய்வு அமைப்புகளின் அலுவலகங்களிலும் சிசிடிவி கேமராக்களை நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை இந்திய உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. இவ்வழிகாட்டுதல்கள் கேமராவின் அம்சங்கள், அவற்றின் அமைவிடம், காட்சிப்பதிவு சேமிப்பு மற்றும் அணுகல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியன. எனினும், இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்தல் மிகவும் குறைவாகவே உள்ளது; மொத்தம் 2,701 காவல் நிலையங்களில் எந்தவித கேமராக்களும் இல்லை. கேமராக்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களிலும், பெரும்பாலானவை நீதிமன்றம் நிர்ணயித்த தரநிலைகளான படப்பிடிப்பு பரப்பளவு, தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் சேமிப்பு திறன் ஆகியவற்றை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை.

காவல் நிலையங்களிலும், மருத்துவமனைகளிலும், மேலும் கைதிகளை கொண்டு செல்லும் நேரங்களிலும், காவல் வன்முறை காரணமாக கைதிகள் சாகடிக்கப்படுவது அடிக்கடி நடைபெறுகின்றன. கைது செய்யும் முன்பும், கைது செய்யப்படும் போதும், அடித்தல், மிரட்டல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை சட்ட அமலாக்க அதிகாரிகள் தகவல்களை பெறுவதற்கு பயன்படுத்துகின்றனர். **துப்பாக்கித் தோட்டாக்களை முறைகேடாக பயன்படுத்தப்படுவதால் கடுமையான காயங்கள் மற்றும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன; குறிப்பாக தலித், ஆதிவாசி, முஸ்லிம், LGBTQIA+ சமூகத்தினர், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வீடற்றோர் போன்ற புறக்கணிக்கப்பட்ட சமூகக் குழுக்கள் இவற்றால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.** இக்குழுக்கள் அடிக்கடி கடுமையான உடல் வன்முறைக்கு உள்ளாகின்றனர். அங்கீகரிக்கப்படாத காவல் வைப்பிடங்கள் — பயன்படுத்தப்படாத கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள், விடுதி அறைகள் கூட காவல் சித்திரவதைகள் நடைபெறும் இடங்களாக மாறியுள்ளன. கைதிகள் அடிதடி, மிரட்டல் மற்றும் கட்டாய ஒப்புதல் பெறுவதற்காகவும், பிற தவறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவ்விடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

புதிய நடைமுறைச் சட்டங்களின் கீழ், அரசு அதிகாரிகள்மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய *நிர்வாக அங்கீகாரம்* (Executive sanction) பெற வேண்டிய நீண்டகால விதிமுறை இன்றும் தொடர்கிறது. ஆனால், காவல் வன்முறை தொடர்பான வழக்குகளில் இந்தத் தடையை நீக்குவதற்காக புதிய பிரிவு ஒன்றைச் சேர்த்துள்ளனர். அதாவது, அனுமதி வழங்கும் அதிகாரி 120 நாட்களுக்குள் பதிலளிக்கத் தவறினால், அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் கருதப்படும். எனினும், இந்தச் சட்டங்கள் விசாரணைக் காலத்தில் போலீஸ் காவலில் வைப்பதற்கான அனுமதிக்கப்பட்ட காலத்தை குறிப்பிடத்தக்க அளவில் நீட்டித்துள்ளன.

நீதித்துறை தலையீடுகள் இருந்தபோதிலும், பொறுப்புக் கூறுதல் மிகவும் குறைவாகவே உள்ளது. **2024 ஆம் ஆண்டில் சுமார் 2,739 காவல் மரணங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் சுமார் 2,400 வழக்குகள் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் பதிவுசெய்யப்பட்டுள்ளன.** 'என்கவுன்டர் நிபுணர்கள்'

(Encounter Specialists) எனப் பெயரிடப்பட்ட காவல் அதிகாரிகள், சட்டப் புறம்பான கொலைகளை (Extrajudicial) நடத்தியதற்காகவே பதவி உயர்வுகள் பெறுகின்றனர்; இது நிறுவனமயமான குற்றங்களைப் புரிய உடந்தையாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. நிலம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளை முன்னெடுக்கும் மனித உரிமைக் காப்பாளர்கள், அடிக்கடி தடுப்பு காவல், சித்திரவதை மற்றும் சட்டவிரோதக் கைது ஆகியவற்றுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

## III. சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையிலுள்ளவர்களுக்கு சித்திரவதையிலிருந்து விடுதலை

குறியீட்டு **எண் (Index Score):** குறிப்பிடத்தக்க **ஆபத்து (Considerable Risk)**

இந்தியாவில் சுதந்திரம் பறிக்கப்பட்டோர் கடுமையான, அமைப்புசார் மனித உரிமை மீறல்களை எதிர் கொள்கின்றனர். **2022 ஆம் ஆண்டில் மட்டுமே 1,995 கைதிகள் நீதிமன்றக் காவலில் உயிரிழந்துள்ளனர்; அதில் 159 மரணங்கள் இயல்பானவை அல்ல எனப் பதிவாகியுள்ளன.** இது, காவல் நிலையங்கள் மற்றும் சிறைகளில் நிலவும் ஆபத்தான சூழல்களை வெளிப்படுத்துகிறது. சிறைகளில் கூட்ட நெரிசல் இந்த நிலையை மேலும் மோசமாக்குகிறது. தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) 2022 சிறை புள்ளிவிவரங்களின்படி, **இந்திய சிறைகள் சராசரியாக 131.4% நிரம்பிய விகிதத்தில் உள்ளன.** இந்தக் கூட்ட நெரிசல், சிறைக் கைதிகளை அதிகமாகப் பாதிக்கிறது. அவர்கள் போதிய உணவு, உடை, படுக்கை பற்றுக்குறையால் கடுமையாக அவதிப்பட்டு, அவர்களின் நிலைமை மேலும் மோசமடைகிறது.

இந்தியச் சிறைகளில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கெதிரான பாகுபாடு அச்சுறுத்தும் அளவிற்கு பரவலாக உள்ளது; இதற்குப் பெரும்பாலும் சாதி, மதம், பொருளாதார நிலை, மாற்றுத் திறன்கள் மற்றும் பாலியல் விருப்பம் காரணமாகின்றன. நிறுவனமயமான அலட்சியத்தை வெளிப்படுத்திய முக்கியமான ஒரு சம்பவம், **பேராசிரியர் பி.என். சாய்பாபா தொடர்புடையது. அவர் 90% இயலாமையுடன், நாற்காலியில் (wheelchair) கட்டுப்பட்டிருந்தபோதிலும், போதுமான வசதிகள் இன்றி 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வைக்கப்பட்டதால், அவரது உடல்நிலை கடுமையாகக் குன்றியது.** அவர் 2014 ஆம் ஆண்டு மே 9 ஆம் நாள் தில்லியில் சட்டப் புறம்பாக கைது செய்யப்பட்டார்; பின்னர் 2017 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் நாள், *சட்டவிரோதச் செயல்கள் (தடுப்பு) சட்டத்தின் (UAPA)* கீழ் சதி மற்றும் தீவிரவாத அமைப்பில் உறுப்பினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆயுள் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், நரம்பு சேதம் மற்றும் போதிய மருத்துவ சிகிச்சையின்மையால், அவரது இடது கை செயலிழந்தது. சித்திரவதை அல்லது மோசமான நடவடிக்கைகளுக்கு உள்ளான கைதிகளுக்கு அவை தொடர்பான புகார் அளிக்கும் நடைமுறைகள் பெரும்பாலும் பயனற்றவையாகவே உள்ளன. சிறப்பு மருத்துவ வசதிகளோ அதிகார தலையீடின்றி அரிதாகவே நடைபெறுகின்றன; மேலும் சித்திரவதைக் குற்றச் சாட்டிற்கு உள்ளான காவல்துறையினர் விசாரணைக் காலத்திலும் அரிதாகவே இடைநீக்கம் செய்யப்படுகின்றனர். மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து புகார் அளிக்கும் கைதிகள், அதிகப்படியான சோதனைகளுக்கும், அநியாய தண்டனைகளுக்கும், தனிமைப்படுத்தல் மற்றும் மிரட்டலுக்கும் பழிவாங்குதல்களுக்கும் அடிக்கடி உள்ளாகின்றனர், ஏன், சில வேளைகளில் அவர்கள் கொலையும் செய்யப்படுகின்றனர்.

மேலும், உள்துறை அமைச்சகம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வழங்கிய தரவுகளின்படி, மேற்கு வங்காளத்தில் காவலில் நிகழ்ந்த மரணங்கள் 2022 முதல் 2023 வரை **300% அதிகரித்துள்ளன. இந்தியாவின் குற்றவியல் பொறுப்புக்கான குறைந்தபட்ச வயது கவலைக்கிடமாக மிகக் குறைவாக, வெறும் 8 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.** சிவில் சமூக உறுப்பினர்கள்

அதிகாரப்பூர்வமற்ற சிறைச் சோதனைகள் மேற்கொள்ளக் கூடிய கோட்பாட்டு விதிமுறைகள் இருந்தபோதிலும், நடைமுறையில் சாத்தியமற்றதாகவே இருக்கிறது. குறிப்பாக மனித உரிமை காப்பாளர்கள், காவல் நிலையங்கள் மற்றும் சிறைகளின் நிலவரங்களைப் பொது வெளியில் பதிவுசெய்வதற்காக, அடிக்கடி பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாகின்றனர்.

## IV. தண்டனை விலக்கை முடிவுக்குக் கொண்டு வருதல் (Ending Impunity)

**குறியீட்டு எண் (Index Score): குறிப்பிடத்தக்க ஆபத்து (Considerable Risk)**

சட்ட மற்றும் நிறுவன குறைபாடுகள் காரணமாக இந்தியாவில் சித்திரவதையை நிகழ்த்தும் காவல் துறை அதிகாரிகளுக்கு தண்டனை விலக்கு (Impunity) இன்றும் பரவலாக உள்ளது; சித்திரவதையை வெளிப்படையாக குற்றமாக்கும் முழுமையான உள்நாட்டு சட்டம் ஒன்று இந்தியாவில் இன்னும் இயற்றப்படவில்லை; வழக்குகள் பொதுவாக காவல் அல்லது நீதிமன்றக் காவலில் நிகழ்ந்த மரணங்களாகவே வகைப்படுத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களைக் காக்கும் தனித்த சட்டங்கள் இல்லாதது, புகாரளிப்பதை கடுமையாகத் தடுக்கிறது. இந்தக் குறைபாடு, உச்ச நீதிமன்றத்தின் 2018 ஆம் ஆண்டு தீர்ப்பான மகேந்தர் சாவ்லா மற்றும் பலர் எதிர் ஒன்றிய அரசு என்ற வழக்கில் பகுதியளவில் மட்டுமே சரிசெய்யப்பட்டது. இருந்தபோதிலும், நீண்டகாலமாக இழுபறியில் கிடக்கும் நீதித்துறை செயல்முறைகளின் காரணமாக, பாதிக்கப்பட்டோர் சட்ட உதவியை அரிதாகவே பெறுகின்றனர்; பல ஆண்டுகள் தீர்வு இன்றி நீடிக்கும் நிலையே இருக்கிறது.

தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்கள் உட்பட சட்ட அமைப்புகளுக்கு, ஆயுதப்படைகள் மேற்கொள்ளும் உரிமை மீறல்களை விசாரிக்கும் அதிகார வரம்பு இல்லாததால், பொறுப்புக் கூறும் நிலையில் இன்னும் அதிகமான குறைபாடுகள் இருக்கின்றன. 2025 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற 45வது கூட்டத் தொடரில், *தேசிய மனித உரிமைகள் ஆணையங்களின் பன்னாட்டுக் கூட்டமைப்பு (GANHRI)*, இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தரத்தை 'A' யிலிருந்து 'B' ஆக குறைக்க பரிந்துரைத்தது. காவல் நிலைய மரணங்களின் விசாரணைகளில் காவல்துறை அதிகாரிகளே ஈடுபடுவது அதன் நடுநிலைத்தன்மையை பாதிக்கும் என்பது இதற்கான காரணங்களில் அடங்கும். மேலும், "சுருங்கிவரும் சனநாயக தளம் (Shrinking civic space) மற்றும் மனித உரிமை காப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் எனக் கருதப்படும் நபர்கள் மீது அதிகரித்து வரும் தாக்குதல்கள்" குறித்து தேசிய மனித உரிமை ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் GANHRI தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

குறைவான *தடயவியல் விசாரணை திறன்* (Forensic investigation capacity) பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது. ஏனெனில், *தடயவியல்* நிறுவனங்களை நிர்வகிக்கும் தேசியச் சட்டமோ அல்லது பன்னாட்டு தரநிலைகளைப் பின்பற்றும் கட்டாய விதிமுறையோ இந்தியாவில் இல்லை. இதனால் சித்திரவதை தொடர்பான விசாரணைகளில் துல்லியமான, நடுநிலையான சான்றுகளைப் பெறுவதில் கூடுதல் சவால்கள் உருவாகின்றன.

குற்றச்சாட்டுக்குள்ளான குற்றவாளிகள் மீதான வழக்குகள் அரிதாகவே தண்டனைகளில் முடிகின்றன; இது தண்டனை விலக்கை (Impunity) மேலும் வலுப்படுத்துகிறது. பாதிக்கப்பட்டோர், சாட்சியாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மீது மிரட்டல், பழிப்பேற்றுதல் போன்ற பழிவாங்குதல்கள் பொதுவாக நடைபெறுகின்றன; மேலும் காவல்துறையினரும் குற்றவியல் விசாரணை அதிகாரிகளும் அடிக்கடி புகாரளிப்பதைத் தடுக்கும் வகையில் செயல்படுகின்றனர்.

## V. பாதிக்கப்பட்டோரின் உரிமைகள்

குறியீட்டு **எண் (Index Score):** குறிப்பிடத்தக்க **ஆபத்து (Considerable Risk)**

இந்தியாவில் சித்திரவதை மற்றும் மோசமான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான சட்ட வழிவகைகளில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் (Legislative gaps) உள்ளன. ஏற்கனவே உள்ள சட்டப் பாதுகாப்பு விதிமுறைகளின் அமலாக்கம் முழுமையானதாக இல்லை. தற்போது, சித்திரதையால் பாதிக்கப்பட்டோர் என்பதை வரையறுக்கும் முழுமையான தேசியச் சட்டம் எதுவும் இல்லை; இருப்பினும் ஒரு சில சட்டப் பிரிவுகள் குறிப்பிட்ட சமூகக் குழுக்களுக்கு வரையறுக்கப்பட்ட சில பாதுகாப்புகளை வழங்குகின்றன. இதனால், பாதிக்கப்பட்டோர் தங்களுக்கான நீதியினை பெறும் வாய்ப்பும் செயல்திறன் மிக்க நிவாரணம் வழங்கும் வழிவகையும் மிகவும் குறைவாகவே உள்ளது.
விதிவிலக்குகளாக ஒன்றிரண்டு சம்பவங்களில் மட்டுமே பொதுமக்களின் அதிகமான கவன ஈர்ப்பை பெற்றதால், உரிய நீதியும் நிவாரணமும் கிடைக்கப்பெற்றன. சென்னை விக்னேஷ் காவல் நிலையத்தில் மரணம் அடைந்த சம்பவம், தமிழ்நாட்டின் செங்கல்பட்டு சிறப்பு சிறுவர் இல்லத்தில் நடந்த கொடூரமான சிறுவனின் கொலை ஆகியவை, நலிவுற்ற குழுக்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்ட வழிமுறைகள் போதுமான அளவில் அமலாக்கப்படவில்லை என்பதை வெளிச்சமிட்டு காட்டுகின்றன.
சித்திரவதைக்குள்ளானோர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து போதிய நிவாரணத்தைப் பெற கடுமையாக போராடுகின்றனர்; இது, பொறுப்புக்கூறல் நிலையிலும், நீதிமன்ற செயல்முறைகளிலும் இருக்கும் அமைப்புசார்ந்த பலவீனங்களை பிரதிபலிக்கிறது. மேலும், சித்திரவதையிலிருந்து உயிர் தப்பியவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு (Compensation) மிகவும் அரிதும், போதாமையுமாகவே உள்ளது; சித்திரவதையிலிருந்து உயிர் பிழைத்தவர்களில் 0 to 25% பேர்களுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் மையமாக இருக்கும் அரசின் அலட்சியமும், பாதிக்கப்பட்டோருக்கு முழுமையான ஆதரவு இல்லாமையுமே காரணங்கள் ஆகும். இதன் விளைவாக, சித்திரவதையிலிருந்து உயிர் பிழைத்தவர்களில் பெரும்பாலானோர் போதுமான மனநல ஆதரவு, மருத்துவ சேவை அல்லது நீதியினை பெறாமல் வஞ்சிக்கப்படுகின்றனர்.

## VI. அனைவருக்கும் பாதுகாப்பு

குறியீட்டு **எண் (Index Score):** குறிப்பிடத்தக்க **ஆபத்து (Considerable Risk)**

இந்தியாவில் பல நலிவுற்ற, எளிதில் பாதிப்புக்குள்ளாகும் குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வழிவகைகளில் (protection mechanisms) நிறைய குறைபாடுகள் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது ஆணவக் கொலைகள் (honour killings) அதிகரித்துள்ளன; இருப்பினும் இச்சம்பவங்கள் பெரும்பாலும் வெளியே தெரியாமல் மூடி மறைக்கப்படுகின்றன. மேலும் இது தொடர்பான சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. இவ்வாறு சமூகத்தை நாசமாக்கும் இந்தக் கொடிய பழக்கம் தொடர்ந்து நிலவியபோதிலும், அதனை கையாளும் சிறப்புச் சட்டம் இந்தியாவில் இன்னும் நிறைவேற்றப்படவில்லை; இருப்பினும், இதற்கான ஒரு மசோதாவை இந்திய சட்ட ஆணையம் அறிக்கை எண் 242-ல் பரிந்துரைத்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது வன்முறைகள் பரவலாக நடைபெறுவதை பல்வேறு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் வெளிப்பாடுகளாக திருமணத்துக்குள் நிகழும் பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, அமிலத் தாக்குதல்கள், பெண்களை நிர்வாணமாக தெருக்களில் இழுத்து செல்லுதல் போன்றவை நடக்கின்றன. பாலியல் வன்முறை (கற்பழிப்பு) வழக்குகள் பல சமயங்களில் தவறாகக் கையாளப்படுகின்றன; நீதிபதிகள் பலமுறை பாதிக்கப்பட்டவர்களையே குற்றம்சாட்டும் நிலைப்பாடு எடுத்து, உயிர்தப்பியவர்களே குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பை சுமக்க வேண்டியதால் (burden of proof)

நீதியைப் பெறுவது கடினமாகிறது. மேலும், வலுக்கட்டாய திருமணங்கள் மற்றும் சிறுர் திருமணங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன; அவற்றை முற்றிலும் ஒழிப்பதற்கான செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை அரசு அரிதாகவே எடுக்கிறது. போதுமான அரசு தலையீடு அல்லது தடுப்பு கொள்கைகள் இன்றி பெண் பிறப்புறுப்பை சிதைக்கும் பழக்கம் (Female Genital Mutilation) இன்றும் தொடர்கிறது. மேலும், பாரதீய நியாய சன்ஹிதா, 2023 (Bharatiya Nyaya Sanhita, 2023)-இடம் பெறும் வன்புணர்வு தொடர்பான சட்ட வரையறை, திருமணத்துக்குள் நிகழும் பாலியல் வன்முறையை (Marital Rape) உள்ளடக்கவில்லை.

அச்சுறுத்தப்படும் அளவுக்கு குழந்தைகளும் பெருமளவில் சுரண்டப்படுகின்றனர். **கொத்தடிமை முறை (Bonded Labour) இன்னும் பரவலாக நிலவுகிறது;** இதில் குழந்தைகள் அடிக்கடி **பிச்சை எடுக்கவும், பாலியல் தொழில் (prostitution), உறுப்பு கடத்தல் (organ trafficking), பட்டாசு உற்பத்தி போன்ற அபாயகரமான வேலைகளில்** ஈடுபடவும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

2024-ல் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வின்படி, கடந்த ஆறு ஆண்டுகளில் இந்தியாவில் 9,600-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பெரியோருக்கான சிறைகளில் தவறுக அடைக்கப்பட்டனர்.

இந்தியாவின் பழங்குடியினர் சமூகங்கள், சட்டரீதியாக “பட்டியல் பழங்குடியினர்” (Scheduled Tribes) என்றும், “ஆதிவாசிகள்” (Adivasi) என்றும் அழைக்கப்படும் இவர்கள், பெரும்பாலும் மைய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டு புறக்கணிக்கப்படுகிறுர்கள்; அவர்களுக்கு அர்த்தமுள்ள பங்குபெறும் வாய்ப்பு முழுமையாக மறுக்கப்படுகிறது. மேலும் நிலம் வளங்கள் தொடர்பான மோதல்களில் சிக்குகிறுர்கள். இதில் சுரங்கத் தொழில்களும் (extractive industries), எரிசக்தி தொடர்பான திட்டங்களும் அடங்கும்.

**இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், கடந்த இரண்டாண்டுகளாக இன வன்முறையால் மக்கள் பெருமளவில் அவதிப்பட்டு வருகின்றனர்; மாநில பாதுகாப்பு படைகள் 260-க்கும் மேற்பட்டோரைக் கொன்று, 60,000-க்கும் மேற்பட்டவர்களை இடம்பெயரச் செய்துள்ளன.**

”தேசியப் பாதுகாப்பு” என்ற போர்வையில், பாதிக்கப்பட்ட தனிநபர்கள் சட்ட அமலாக்கத் துறையினரின் மோசமான, மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் விசாரணைகளின் போது உட்படுத்தப்பட்டு மரணத்தையும் எதிர்கொள்கிறுர்கள், குறிப்பாக தீவிரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டபோது, **சான்ருக, மனித உரிமை செயற்பாட்டாளர் ஜி.என். சாய்பாபா, 90% உடல் ஊனமுற்றவராகவும், வீல் சேர் பயன்பாட்டாளராகவும் இருந்தபோதிலும், நாக்பூர் சிறையில் 7 ஆண்டுகள் போதுமான மருத்துவ சேவைகள் இன்றி, கொடூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.**

பத்திரிகையாளர் சித்திக் காப்பன், ஜாதி அடிப்படையிலான பாகுபாட்டை வெளிக்கொண்டு வந்ததற்காக, தீவிரவாத குற்றச்சாட்டுகளின் கீழ் காவலில் வைக்கப்பட்டார். **169-க்கும் மேற்பட்ட மனித உரிமை நிறுவனங்கள் உள்ளபோதிலும், காவல் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் நிகழும் சித்திரவதைகள், உரிமை மீறல்கள் குறித்த பயனுள்ள கண்காணிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. இதனுல் மனித உரிமை மீறல்கள் இன்னும் தொடர்வதற்கு வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.**

## VII. தற்காப்பு உரிமையும் மற்றும் சனநாயகத் தளமும்

குறியீட்டு **எண் (Index Score):** குறிப்பிடத்தக்க **ஆபத்து (Considerable Risk)**

இந்தியாவில், வாக்குரிமை, கருத்துச் சுதந்திரம், கூடுகை மற்றும் சங்கமாக சேருவதற்கான உரிமை போன்ற அரசியலமைப்பு பாதுகாப்புகள் உத்தரவாதப்படுத்தப்பட்டாலும் கூட, மனித உரிமை காப்பாளர்களும் (HRDs) சிவில் சமூக அமைப்புகளும் கடுமையான நெருக்கடிகளையும், கட்டுப்பாடுகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றன.

**வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டம், 2010 (FCRA) 2020 ஆம் ஆண்டில் கடுமையான திருத்தம் செய்யப்பட்டதன் விளைவாக, 30,000-க்கும் மேற்பட்ட அரசு சாரா அமைப்புகள் (NGOs) தங்கள் பணிகளை முழுமையாக செய்ய இயலாமல் போய்விட்டன.**

மேலும், சட்டவிரோதச் செயல்பாடுகள் (தடுப்பு) சட்டம் (UAPA), பணமோசடி தடுப்பு சட்டம், மற்றும் பல்வேறு தடுப்பு காவல் சட்டங்கள், தேசியப் புலனாய்வு முகமை (NIA) மற்றும் மத்திய புலனாய்வு நிறுவனம் (CBI) போன்ற அமைப்புகள் தவறுகப் பயன்படுத்தப்படுவதால், குடிமை உரிமை, தனிநபர் சுதந்திரங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த கால மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி போராடிய மனித உரிமை காப்பாளர்கள் (HRDs) — குறிப்பாக 2002 குஜராத் கலவரம் தொடர்பான நீதி முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் — குறிவைக்கப்பட்ட தாக்குதல்களையும் சிறைத் தண்டனைகளையும் தங்கள் பணிக்கான பழிவாங்குதல்களாக எதிர் கொள்கின்றனர்.

குறிப்பிடத்தக்க உதாரணங்கள்

- **பீமா கொரேகான் வழக்கு** – இதில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக கொடூரமாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.
- **காஷ்மீரிய செயற்பாட்டாளர் குர்ரம் பர்வேஸ்** – மூன்ருண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
- **90% உடல் இயலாமை கொண்ட பேராசிரியர் ஜி.என். சாய்பாபா** – ஒன்பது ஆண்டுகள் சிறையில் இருந்த பின் விடுவிக்கப்பட்டார். ஆனல் ஆறு மாதங்களுக்குப் பிறகு உயிரிழந்தார்.
- **பத்திரிகையாளர் சித்திக் காப்பன்** – ஹத்ரஸ் சம்பவத்தில் சாதி அடிப்படையிலான வன்முறையை விசாரிக்க முயன்றதற்காக இரண்டு ஆண்டுகள் கடும் சிறைவாசம் அனுபவித்தார்.
- **செயற்பாட்டாளர் தீஸ்தா சேதல்வாத்** மற்றும் ஓய்வுபெற்ற **IPS அதிகாரி ஸ்ரீகுமார்** – உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்கு பின்னர் பத்து வாரங்களுக்கும் மேலாக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

பொது ஆர்ப்பாட்டங்களை கண்காணிக்கும் மனித உரிமை காப்பாளர்களுக்கு (HRDs) எதிரான பழிவாங்கல்கள் — விவசாயிகள் போராட்டம், ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கம், ஒடிசாவின் ஜிந்தால் எதிர்ப்பு போராட்டம், மெல்மா விவசாயிகள் போராட்டம் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பழிவாங்கல்கள் அதிகமாக நடக்கின்றன. இதில், சட்டப்புறம்பான கைது மற்றும் மருத்துவ சேவைகளுக்கான அணுகலைக் கட்டுப்படுத்தல் போன்றவை அடங்கும்.

மனித உரிமைக் காப்பாளர்கள் பெரும்பாலும் தடுப்புக்காவல், சிறைவைப்பு, பொய்யான குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர். இதுபோன்ற உரிமை மீறல்களை தடுத்திடவும் அல்லது முறையாக கையாளவும் சட்ட ரீதியாக நிறுவப்பட்டுள்ள தேசிய மனித உரிமை ஆணையம் (NHRC), முறையாக

கையாளாததற்காக உலகளாவிய தேசிய மனித உரிமை நிறுவனங்கள் கூட்டமைப்பு (GANHRI) சார்பில் கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டது.

## வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் அணுகல்

உலக சித்திரவதை குறியீட்டில் (Global Torture Index), ஒவ்வொரு நாட்டிலும் சித்திரவதை குறித்த தகவல் அணுகல் முறையையும், வெளிப்படைத்தன்மையையும் மதிப்பீடு செய்து, சித்திரவதை மற்றும் சட்ட அமலாக்கத் துறையினரின் மோசமான நடவடிக்கைகளின் ஆபத்தை கணக்கிடுகிறது. இதில் தகவல் கிடைப்பது மட்டுமல்லாமல், தரவுகள் சேகரிப்பதில் குடிமைச் சமூக அமைப்புகள் எதிர்கொள்ளும் தடைகளையும், சவால்களையும், அவற்றை அணுகும் திறனையும் கருத்தில் கொள்ளுகின்றன.

ஒரு நாட்டில் தகவல் பெறுவதற்கான உரிமையை அரசு உறுதி செய்ய வேண்டும். இதுகுறித்து அரசின் வெளிப்படை தன்மையும், பொறுப்புணர்வும் அவசியமானதாகும். இதன் மூலம் அமைப்புகளும், பத்திரிகையாளர்களும், தனிநபர்களும், அரசுத் துறைகள் குறிப்பாக சட்ட அமலாக்கத் துறையினரின் மனித உரிமை மீறல்கள் போன்றவைப் பற்றிய தகவல்களை கோர முடியும்.

இந்தக் குறியீடு, ஒரு நாட்டில் தகவல் அணுகலின் போது தனிநபர்களும் அமைப்புகளும் எதிர் கொள்ளும் சவால்களை பிரதிபலிக்கிறது. அதன்படி, ஒவ்வொரு நாடும் அல்லது பிரதேசமும் ஒடுக்கப்பட்ட (Suppressive), மறைக்கப்பட்ட (Concealed), கட்டுப்படுத்தப்பட்ட (Circumscribed), அணுகக்கூடிய (Accessible) அல்லது வெளிப்படையான (Transparent) நிலையில் வகைப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் மதிப்பீடு — தற்போதைய தகவல் அணுகல் மற்றும் வெளிப்படை தன்மையின் நிலையை அடிப்படையாகக் கொண்டு, **“மறைக்கப்பட்ட” (Concealed)** என்ற வகைப்பாட்டில் இடம்பெறுகிறது.

## இந்தியாவில் மாற்றத்திற்காக வலியுறுத்தல்: முக்கிய பரிந்துரைகள்

இந்தக் குறியீட்டில் (Index) இந்தியாவுக்காக 5 முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை குறியீட்டின் இணையப்பக்கத்தில் இடம் பெற்றுள்ளன. எதிர்காலத்தில், சித்திரவதை எதிர்ப்பு இயக்கத்திற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு இவை பயன்படும்.

1. ஐக்கிய நாடுகள் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை (United Nations Convention Against Torture), அதன் விருப்பச் சட்டப்பிரிவு (Optional Protocol) மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் போவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு உடன்படிக்கை (International Convention for the Protection of All Persons from Enforced Disappearances) போன்றவற்றை இந்தியா ஒப்புதல் அளித்து ஏற்புறுதி செய்ய வேண்டும்.

2. பொதுமக்கள் கூடுகைகளை கட்டுப்படுத்துகையில், சட்ட அமலாக்கத்துறையினர் மற்றும் பாதுகாப்பு படைகளுக்கு முறையான பயிற்சி வழங்கப்படுதல் தொடர்பான கோட்பாடுகளை உள்ளடக்கிய மெண்டிஸ் கொள்கைகளை (Méndez Principles on Effective Interviewing) நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம், ஐக்கிய நாடுகள் அவையும் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி பயன்பாட்டுக்கான அடிப்படை கொள்கைகள் (United Nations Basic Principles

on the Use of Force and Firearms) மற்றும் பிற பன்னாட்டு தரநிர்ணயங்களுக்கு முழுமையாக இணக்கமாவதை உறுதிசெய்ய வேண்டும்.

3. மனித உரிமை காப்பாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள், தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் தடுப்புக் காவல் சட்டங்களை தவறாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். அவர்கள் சட்டபூர்வமான மற்றும் அமைதியான மனித உரிமை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

4. காவல்துறை அல்லது நீதிமன்ற காவலில் நடைபெறும் அனைத்து காவல் மரணங்களும் BNSS இன் பிரிவு 196(2)க்கு ஏற்ப, குற்றவியல் நீதித்துறை நடுவரின் மேற்பார்வையில், இஸ்தான்புல் (Istanbul) மற்றும் மின்னசோட்டா (Minnesota) வழிகாட்டுதல்களுக்கு இணங்க, முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உடற்கூறு பரிசோதனை தொடங்குவதற்கு முன், பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் இறந்தவரின் உடலைக் காணும் உரிமை நடைமுறைகளால் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், உடற்கூறு அறிக்கையும், அதன் காணொளிப் பதிவும் குடும்பத்தினருக்கு அதே நாளில் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

5. பன்னாட்டு மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அங்கீகார துணைக்குழுவின் (GANHRI Sub Committee on Accreditation) பரிந்துரைகளின் அடிப்படையில் மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (2019) திருத்தப்பட வேண்டும். இதன் மூலம், இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையம் தனது சுதந்திரம், தன்னாட்சி மற்றும் செயல்திறன் மிக்க விசாரணை அதிகாரங்களை நிலைநிறுத்துவதை உறுதிசெய்ய வேண்டும்.